03.03.2022.

STC.07/2019 ஜார்ஜ் மார்டின் த/பெ.பிச்சை PW1

முதல் விசாரணை தொடர்ச்சி

எதிரி 27.12.2018 தேதியிட்ட 337413 என்ற எண் கொண்ட பாரத ஸ்டேட் வங்கியின் காசோலையை என்னிடம் அளித்திருந்தார். அந்த காசோலை ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி கொடுத்த காசோலையில் போதிய பணம் இல்லை என்று 31.12.2018 அன்று எதிரியின் காசோலை திருப்பப்பட்டதற்கான Return Memo ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதனால் நான் எதிரிக்கு எனது வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு ஒன்றினை 25.01.2019 அன்று அனுப்பினேன். அதன் அலுவலக நகல் ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பினை எதிரி 30.01.2019 அன்று பெற்று கொண்டார் என்பதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி என்னிடம் பணம் பெற்று கொண்டு என்னை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் காசோலையை அளித்திருந்தார். எனவே மனுவில் கண்டுள்ளவாறு உத்தரவு பிறப்பிக்க வேண்டுகிறேன்.

(எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)